# உங்களுக்கு தெரியுமா?

**இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்கள், வாடிக்கையாளர்களின் (நிதியியல் வாடிக்கையாளர்கள்) உரிமைகளை அங்கீகரித்து பாதுகாத்தல் வேண்டுமென்பதுடன் தற்போது நடைமுறையிலுள்ள நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பின் கீழ் நியாயமானதும், வெளிப்படையானதும், சமத்துவமிக்கதுமான விதத்தில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களில் அவர்கள் ஈடுபடுவதற்கு வசதியளிக்கவேண்டும்.**

## நிதியியல் வாடிக்கையாளர்களான உங்களது உரிமைகள்



- ஏதேனும் கொடுக்கல்வாங்கல் பற்றி விரும்பிய மொழியில்* முழுமையான, தெளிவான, சுருக்கமான, துல்லியமான மற்றும் தவறாக வழிநடத்தாத தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை.
- ஒப்பந்தக் கட்டத்தின் முன்னரோ அல்லது பின்னரோ அல்லது எச்சந்தர்ப்பத்திலும் கோரிக்கையின் நிமித்தம் கொடுக்கல்வாங்கலின் ஏதேனும் கட்டத்தில் அது பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
- முறைப்பாடொன்றினைச் செய்தல் மற்றும் நியாயமான காலப்பகுதியினுள் திருப்திகரமான பதிலினைப் பெற்றுக்கொள்ளல்.
- ஒவ்வொரு நிதி நிறுவனத்தினுள்ளேயும் அனைவரும் சமத்துவமாகவும் நியாயமான விதத்திலும் நடாத்தப்படுதல், விசேடமாக முதியோர், மாற்றுத்திறனாளிகள் அல்லது குறைவான நிதியியல் அறிவுடைய நிதியியல் வாடிக்கையாளர்கள் விசேட கவனத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நிதியியல் சேவைகளுக்கு நியாயமான பெறுவழியினைக் கொண்டிருத்தல்.

## இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ள நிதி நிறுவனங்கள்

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்
- உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்
- உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்
- பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்
- அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள்
- அதிகாரமளிக்கப்பட்ட முதனிலைத் தரகர்கள்
- கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்கள்**



கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான மேற்குறித்த எவையேனும் நிதி நிறுவனங்களுடன் உங்களுக்கு ஏதேனும் பிரச்சனையிருக்குமாயின்,

**தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு முதலில் உரிய நிதி நிறுவனத்திற்கு முறைப்பாடு ஒன்றினை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.**



நியாயமான காலப்பகுதியினுள் நிதியியல் நிறுவனத்திடமிருந்து திருப்திகரமான பதிலை நீங்கள் பெற்றுக்கொள்ளாவிடின்,

மேலதிக கலந்தாய்விற்காக **இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்கு** எழுத்துமூலமான முறைப்பாட்டை நீங்கள் சமர்ப்பிக்கலாம்.

* தகவல்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

** கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள பங்கேற்பாளர்களாக கொடுப்பனவு அட்டைகளை வழங்குபவர்கள், நிதியியல் கொடுப்பனவு அட்டைகளை ஏற்பவர்கள், வாடிக்கையாளர் கணக்கை அடிப்படையாகக் கொண்ட கையடக்கத்தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகளைத் தொழிற்படுத்துபவர்கள் மற்றும் கையடக்கதொலைபேசி அடிப்படையிலமைந்த இ-பண முறைமைகளின் தொழிற்படுத்துநர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

**இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தின் முறைப்பாடு சமர்ப்பித்தல் படிவத்தினை கீழேதரப்பட்ட இணையவழி இணைப்பின் மூலம் அல்லது QR குறியீட்டினூடாக பதிவிறக்கம் செய்யலாம்.**

**www.cbsl.gov.lk/ta/fcrd**

**1935** (துரித அழைப்பு)


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
011 2477966 112 477744 fcrd@cbsl.lk www.cbsl.gov.lk